நம் முன்னோர்கள் மதுவை விலக்க வேண்டும் என்பதைக் காலம் காலமாக வற்புறுத்தி வந்துள்ளனர். வள்ளுவரும் கள்ளுண்ணாமை என்று ஒரு தனி அதிகாரமே எழுதி உள்ளார். விடுதலை போராட்ட காலத்தில் நம் தலைவர்கள் மது விலக்குப் பிரச்சாரத்தை விடுதலை முழக்கத்துடன் இணைந்து செய்தார்கள். சட்டம் இல்லாமலேயே கட்டுப்பாடாய் குடியை நிறுத்த தலைவர்கள் முயன்றனர். நாம் சுதந்திரம் பெற்ற பின்னர் நாம் வகுத்த நமது அரசியலமைப்பு சட்டத்தில் அரசு பின்பற்ற வேண்டிய கொள்கைகள் என்ற பகுதியில் நாடு முழுவதும் முழு மது விலக்கு நடைமுறைப்படுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டு உள்ளது.

ஒரு சுதந்திர நாட்டில் மக்களாட்சி முழுமையாக வெற்றிபெற அந்நாட்டு மக்கள் அனைவரும் பொருளாதார சுதந்திரம் பெற்று வாழ வேண்டும். ஏன் எனில் ஏழைகள் இருப்பின் அவர்களின் வாக்குகளை பணம் படைத்தவர்கள் விலைக்கு வாங்க முடியும். வறுமை வந்தால் எல்லா துன்பங்களும் வரும் என்பதால், தற்சமயம் வரும் பணத்திற்காக வறியவர் தம் வாக்கை பணம் கொடுப்பவருக்கு அளிக்க வேண்டி வரும. ஆகவே வறியவர் வாழும் நாட்டில் உண்மையான மக்களாட்சி நிலவ முடியாது. பெரும்பாலான மதுவுக்கு அடிமையானவர்கள் வறுமையில் வாடுபவர்களே. அவர்கள் பணம் தருபவர், இலவசம் தருவதாக வாக்களிப்பவர், ஆகியோருக்கு தம் வாக்கை அளிப்பதால், குடிக்காத நாம் மக்களாட்சியின் முழு பலன்களை அனுபவிக்க முடியாமல் போகிறது என்பதை நாம் விரைந்து உணர வேண்டும்.

மக்கள் ஆட்சி நல்ல முறையில் செயல்படவேண்டும் என்று விரும்பும் நாம், மதுப் பழக்கத்தில் யாரும் வீழாமல் இருக்க நம்மால் முடிந்ததைச் செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயம். நாம் நமது மாநில, மைய கூட்டாட்சி அரசுகளை அரசியலமைப்புச் சட்டப்படி மதுவிலக்குக் கொள்கையைச் செயற்படுத்த வற்புறுத்த வேண்டும். ஆனால், அது பலன் தராது என்பதே நிதர்சன உண்மை. 1977லிலிருந்து ஒவ்வொரு முறையும் தேர்தல் வருவதற்கு ஓர் ஆண்டுக்கு முன் எல்லா கட்சிகளும் மதுவிலக்கு குறித்து பேசுவார்கள். நீங்கள் 2000, 2005, 2010ஆம் ஆண்டு நாளிதழ்களைப் பார்த்தால் உண்மை விளங்கும். 1977லிலேயே அன்றிருந்த அதிமுக அரசினர் அமைத்த வல்லுநர் குழு மது விலக்கைக் கடுமையாக செயல்படுத்த வேண்டும் என்று பரிந்துரைத்தது. ஆனால் அந்த பரிந்துரையை ஏற்காது, தமிழக அரசு மது விலக்கைத் தளர்த்தியது! அன்றிலிருந்து இன்று வரை எப்பொழுதுமே மதுவிலக்குக் கொள்கையைக் குறித்து சட்டமன்றத்தில் விவாதிக்கப் படவில்லை. எப்போதும் யார் ஆட்சியில் அரசுக்கு மதுவால் அதிக வருமானம் வந்தது என்பது குறித்தே சட்டமன்றத்தில் விவாதம் நடைபெற்றது! இன்று நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மது விலக்கைச் செயல்படுத்துவோம் என்று சொல்லும் முக்கியக் கட்சிகள் அனைத்தும் தமிழ் நாட்டு அரசிலோ, மைய அரசிலோ அங்கம் வகிப்பவர்கள் அல்லது வகித்தவர்கள்தான். எந்த கட்சியும் ஆட்சியில் இருக்கும்போது மது விலக்கு கொள்கையைச் செயல்படுத்துவது குறித்து பேசுவதில்லை. ஆகவே தமிழக அரசு மது விலக்கைச் செயல்படுத்தும் என்று எதிர்பார்ப்பதில் பொருளில்லை என்றுதான் தோன்றுகிறது. எனினும், அரசைக் கேட்க வேண்டும் என்பதை விடமுடியாது. ஆனால் அரசை மட்டுமே நம்பி இருத்தல் ஆகாது.

சுதந்திரப் போராட்டக் காலத்தில் போராட்ட வீரர்கள் செய்தது போல மதுவைத் தவிர்க்க வேண்டும் என்று மதுவுக்கு அடிமை ஆனவரிடமும், அவர் குடும்பத்தாரிடமும் தனித்தனியாக பிரச்சாரம் செய்யவேண்டும். ஒரு வீட்டில் குடும்பத் தலைவர் குடிப்பவராக இருந்தால், அந்த குடும்பத்தாருக்கு மதுவில் சத்து ஏதுமில்லை. குடும்பத் தலைவர் குடிப்பதால்தான் அவர் உடல் நலம் கெடுகிறது; குடும்ப வருமானம் குறைகிறது; உங்களுக்கு நல்ல உணவும், உடையும் கிடைக்கவில்லை; மொத்தத்தில் குடும்பத்தில் வறுமைத் தாண்டவமாடுகிறது. குடும்பத் தலைவர் மதுவுக்கு அடிமையானதால், அவர் உடல், மனம், உணர்வு, ஒழுக்கம், உறவு ஆகியவற்றில் எல்லாம் பாதிக்கப்பட்டு இருகிறார். அவர் மதுவிடமிருந்து மீட்கப் படும்போது, அவர் உடல் நலம் பெறுவார். மனம் தூயமை பெறும். உணர்வுகள், ஒழுக்கம், உறவு ஆகியவை மேம்படும். உங்களுக்கும் நல்ல உணவு, உடை கிடைக்கும். குழந்தைகள் நிமமதியாக பள்ளிக்குச் சென்று கல்வி கற்பர். மொத்தத்தில் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்., குடும்பத் தலைவர் மனதில் பதியுமாறு: குடிப்பது பெருமை அல்ல. வெட்கப்பட வேண்டியது என்பதை நீங்கள் எடுத்துரைத்து அவரை மது அரக்கனிடம் இருந்து காப்பாற்ற வேண்டும். மது விலக்கப்படும்போது மதி வளரும், மகிழ்ச்சி பெருகும் நீங்களும் மகிழ்ச்சியுடன் வாழ உங்கள் வீட்டிலும் மதுவை விலக்குங்கள். மதுவை விலக்கி,, மதியை வளர்த்து. மகிழ்ச்சியைப் பெருக்குவோம் என்பனவற்றை அறிவுறுத்த வேண்டும்.

மதுவுக்கு அடிமையானவரிடம், மது உடலில் எல்லா பாகங்களையும், அமைப்புகளையும், கெடுக்கும். முக்கியமாக கல்லீரலை மிக மோசமாகக் கெடுக்கும். அதாவது நீங்கள் குடிப்பதால் நீங்களே உங்கள் உடல் நலத்தை முழுமையாகக் கெடுத்துக் கொள்கிறீர்கள்! உங்கள் வருவாயும் குறைகிறது. நீங்கள் மது குடிப்பதற்கு நிறைய செலவு செய்வதால், உங்கள் வாழ்க்கைத் தரம் தாழ்வடைகிறது. மேலும், உங்கள் உழைப்பை ஏன் வீணாக்கவேண்டும்? நீங்கள் கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதித்த பணத்தை நீங்கள் ஏன் உங்கள் குடும்பத்துக்குக் கொடுக்காமல், வீணாக மதுக்கடை மூலமாக அரசுக்குக் அளிக்கிறீர்கள்? மதுக்கடை வருவாயில்தான் இலவசங்கள் தருகிறோம் என்று அரசே சொல்கிறதே! உங்களைக் குடிக்க வைத்து உங்களிடம் உள்ள பணத்தைப் பிடுங்கிக கொண்டு அதில் ஒரு பகுதியை உங்கள் குடும்பத்துக்கு இலவசமாகத் தந்து அரசு தான் நல்ல

பெயர் வாங்கிக கொள்கிறதே! நீங்கள் குடிப்பதை நிறுத்தி நேராகவே உங்கள் பணத்தை உங்கள் குடும்பத்துக்குக் கொடுத்து கௌரவமாக வாழலாமே! நீங்கள் ஏன் ஏமாற வேண்டும்? அரசு மதுக்கடை விற்பனையை வைத்துப் பார்த்தால், நீங்கள் குடிப்பதற்காக நாளும் சற்றேறக்குறைய 150ரூபாய் செலவு செய்கிறீர்கள்! அதாவது ஆண்டுக்கு ஐம்பதினாயிரம் ரூபாயாவது செலவு செய்கிறீர்கள்! மதுவில் சத்து எதும இல்லை; அது மயக்கத்தை மட்டுமே தருகிறது. அதாவது, ஒவ்வொரு ஆண்டும் உங்களுக்கு ஒரு பயனும் இல்லாத குடிக்காக ஐம்பதினாயிரம் ரூபாய் செலவு செய்கிறீர்கள்! நீங்கள் உங்கள் ஆயுளில் இருபது ஆண்டுகள் குடித்தீர்கள் என்றால் ஒரு பயனும் இல்லாததற்காக பத்து இலட்சம் ரூபாய் செலவு செய்திருப்பீர்கள்! அதை நீங்கள் சேமித்திருந்தால் அது முப்பது இலட்சம் ரூபாய் ஆகியிருக்கும்! அதில் நீங்கள் ஒரு நல்ல வீட்டை வாங்கி இருக்கலாம் அல்லது உங்கள் குழந்தைகளை மேல் படிப்பு படிக்க வைத்திருக்கலாம்! மயக்கும் மதுவைக் குடித்து இவற்றை எல்லாம் நீங்கள் இழந்திருக்கிறீர்கள்! ஆகவே நீங்கள் இத்தனை நாட்கள் குடித்ததற்காக் வெட்கப்பட வேண்டும். நீங்கள் மதுவை மறந்தால், உங்கள் உடல் நலம் பெறும்; மனம் தூய்மை பெறும். உணர்வுகள், ஒழுக்கம், உறவு ஆகியவை மேம்படும். உங்கள் குடும்பத்தினருக்கு நல்ல உணவு, உடை கிடைக்கும். குழந்தைகள் நிமமதியாக பள்ளிக்குச் சென்று கல்வி கற்பர். மொத்தத்தில் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். மது விலக்கால் மதி வளரும், மகிழ்ச்சி பெருகும். நீங்களும் மகிழ்ச்சியுடன் வாழ, மதுவை விட்டு விலகுங்கள். குடிக்கு அடிமையாகாதீர்கள். குடும்பத்துக்காக உழையுங்கள் என்று விளக்க வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் ஒருவர் அல்லது இருவரை மது அரக்கன் வலையில் வீழாமலும், மது அரக்கனிடம் இருந்து காப்பாற்றவும் முடிந்தால், ஓரிரு ஆண்டுகளிலேயே மது விற்பனை வெகுவாகக் குறைந்து போகும். மது விலக்கை செயல்படுத்த வேண்டும் என்று நாம் அரசை வேண்ட வேண்டி இருக்காது! இன்றையச் சூழலில் இதுவே சரியான வழி! இதைச் செய்வது நமது கடமை. நம் கடமையை நாம் செய்வோமாக!

**நகல்கள் பல எடுத்து உங்களுக்குத் தெரிந்தவர்கள் அனைவருக்கும் அளிக்க வேண்டுகிறோம்.**

**ச. முத்துக்குமரன்**
**முன்னாள் துணைவேந்தர்**
**9840516540**



# மதுவை விலக்குவோம், மக்களாட்சியைப் வளப்படுத்துவோம்